செ.வெ. எண்: 749 நாள்: 13.12.20111

## பத்திரிகைச் செய்தி

**13.12.2011 இன்று மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர், திரு. சி. த. செல்லப்பாண்டியன் அவர்கள் தலைமையில்** தொழிலாளர் துறை அலுவலர்கள் மற்றும் நல வாரியங்கள் குறித்து **பணித்திறனாய்வுக் கூட்டம்** சென்னை–34, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய அலுவலகத்தில் நடைபெற்றது, கூட்டத்தில் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை முதன்மைச் செயலாளர், திரு. மோகன் பியாரே, இ.ஆ.ப., தொழிலாளர் ஆணையர், டாக்டர். சந்திரமோகன், இ.ஆ.ப., கூடுதல் ஆணையர், திரு. பி. கருப்பசாமி, ஆகிய உயர் அலுவலர்கள் தலைமையக அலுவலர்கள் மற்றும் மாவட்ட தொழிலாளர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஆய்வின் போது மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களால் நல வாரியங்களின் செயல்பாடுகள் குறித்தும் நலத்திட்ட உதவிகளின் விவரங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. வாரியத்தின் மூலம் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளை நிலுவையின்றி உரிய பயனாளிகளுக்கு காலதாமதமின்றி வழங்கிட அறிவுரைகள் வழங்கினார். மேலும், வாரியத்தில் பதிவு செய்துள்ள தமிழகத்தின் கடைகோடி தொழிலாளிக்கும் நலத்திட்ட உதவிகள் சென்றடையும் வகையில் அலுவலர்கள் செயல்பட்டு, **மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் எண்ணங்களை நிறைவேற்றும் வகையில் வாரியப் பணிகள் நடைபெற வேண்டும் என கேட்டுக்கொண்டார். மேலும், அனைத்து மாவட்டங்களிலும் இதுபோன்ற ஆய்வு கூட்டங்கள் மாதந்தோறும் நடத்தப்பட்டு பணிகள் சிறப்பாக நடைபெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும், தமிழகத்தில் தொழில் அமைதியினைப் பேணிடவும், தொழிலாளர் நலச் சட்டங்கள் சரியான முறையில் அமல்படுத்திடவும் அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

வெளியீடு: –

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.